சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.158/2022</u>

23.01.2026

வா.சா.1 திரு. குலோத்துங்கன், த/பெ. கதிரேசன்

**5 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்திற்கு என் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்துவிட்டு என் தாத்தா பெயருக்கு மீண்டும் பட்டா கொடுத்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் பெயருக்கு பட்டா எப்படி மாற்றப்பட்டது என்றால் என் தகப்பனார் சொத்து என்பதால் என் பெயருக்கு மாற்றப்பட்டது. எனது தகப்பனாருக்கு தாவா சொத்து உயில்படி வந்தது. எனது தாத்தா ராஜமாணிக்கம் எனது தகப்பனாருக்கு உயில் எழுதிவைத்தார். எனது தாத்தா ராஜமாணிக்கத்திற்கு எனது தகப்பனாரையும் சேர்த்து 9 நபர்கள் வாரிசுகள் ஆவார்கள். எனது தாத்தா எழுதி வைத்த உயிலை மெய்ப்பிக்க நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, அதற்கான வாய்ப்பு இல்லை. என் தகப்பனார் எனது தாத்தா ராஜமாணிக்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்டு குடவாசல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.வ.எண்.20/2024 என்றால் வழக்கு எண் எனக்கு தெரியாது. என் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்தை சேர்க்கவில்லை என்றால் தெரியாது. எனது தகப்பனார் எனது தாத்தா பெயரில் உள்ள சொத்துக்களை அவர் பெயரிலும் எனது சித்தப்பா பெயரிலும் சட்டத்திற்கு புறம்பாக மாற்றினார் என்றால் சரியல்ல, சட்டப்படி தான் மாற்றினார். பிரதிவாதி லோகநாதன் என் சித்தப்பா ஆவார். லோகநாதன் என் தகப்பனார் பெயரிலும் மற்றொரு சித்தப்பா பெயரிலும் பட்டா பெயர் மாற்றம் செய்யக்கோரி கொடுத்த புகாரில் வருவாய்கோட்டாட்சியர் விசாரணை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. வருவாய்கோட்டாட்சியர் விசாரணையில் என் தகப்பனார் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்து 31.01.2012 ல் ரத்து செய்தார்என்றால் இல்லை. 2024 ல் என் பெயரில் இருந்த பட்டாவை தான் ரத்து செய்துள்ளார்கள். எனது தகப்பனார் மாவட்ட வருவாய் அலுவலகத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த மேல்முறையீடு 07.06.2022 ல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எனது தாத்தா உயில் எழுதிவைக்கவில்லை

என்றாலும் என் தகப்பனாரும் என் சித்தப்பாவும் மோசடியாக உயில் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்லும் உயில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படவில்லை. ரோட்டரி பப்ளிக் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் எனது தாத்தா உயில் எழுதியிருந்தால் பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றாலும் என் தாத்தா இறந்த பின்னிட்டு என் தகப்பனார் உயில் தயார் செய்துக்கொண்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் 4 ஏர்ஸ். தாவா சொத்தில் நாங்கள் ஷெட் போட்டுள்ளோம். தாவா சொத்து இன்றைய தேதிவரை எனது தாத்தா ராஜமாணிக்கம் பெயரில் வருவாய்துறை ஆவணங்களில் உள்ளது என்றால் அது தவறு. பொய்யான உயிலை வைத்து எனது தகப்பனாரும் எனது சித்தப்பா ராதாகிருஷ்ணனும் மொத்த சொத்தையும் மற்ற சகோதரர்களுக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக பொய்யான ஆவணங்களை தயாரித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் தாத்தா ராஜமாணிக்கத்திற்கு சொந்தமானது என்றாலும் ராஜமாணிக்கம் இறக்கும்வரை எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றாலும் சரியல்ல. வருவாய்துறையினர் முறையாக விசாரணை செய்து பட்டாவை ரத்து செய்துள்ளார்கள் என்றாலும் எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.